**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 1</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ) அவர்களின் அக்டோபர் 2020 மற்றும் நவம்பர் 2020–ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.261
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 2</u>**

புன்செய் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான அடியிற்கண்ட உரிமங்களுக்கான, அவைகளின் எதிரே குறிப்பிட்டுள்ள காலம் வரையில் ஒப்படைக்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்க மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமத்தின் விபரம் | உரிமம் ஒப்படைக்கப்படும் காலம் | செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | புன்செய் புளியம்பட்டியில் புதன் கிழமை மற்றும் வியாழன் தோறும் கூடும் வாரச் சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 5,00,000/— |
| 2 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி சந்தையில் உள்ள கடை எண். 1 முதல் 50 வரை உள்ள கடைகளுக்கு தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 1,50,000/— |
| 3 | பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணம் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 1,50,000/— |
| 4 | திரு. வி. க. திடலில் உள்ள கட்டணம் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 25,000/— |
| 5 | வாரச்சந்தையில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 20,000/— |
| 6 | வாரச்சந்தையில் உள்ள புளியமரங்களின் மேல்பலனை அனுபவிக்கும் உரிமை | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 5,000/— |
| 7 | வாரச்சந்தையில் குப்பை சேகரிக்கும் உரிமை | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 2,000/— |
| 8 | நகராட்சி அலுவலகம், திருமண மண்டபம் மற்றும் மேல் நிலை தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேல்பலனை அனுபவிக்கும் உரிமை. | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | 10,000/— |

**(ந. க. எண்.1702/2020/A1)**

**அலுவலககுறிப்பு :**

**1.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நநி4) துறை அவர்களின் அரசாணை (நிலை) எண் 181 நாள்.19.9.2008-ன்படி மேற்கண்ட குத்தகை உரிமம் இனங்கள் 01.04.2021 முதல் 31.3.2024 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ள பொது ஏலமிட மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2015-2016 முதல் 2017-2018 -ம் ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட பொது ஏல நிபந்தனை சிறப்பு மற்றும் தனி நிபந்தனைகளின்படி மற்றும் மேற்கண்டுள்ள அட்டவணையில் வரிசை எண் **1** மற்றும் **2** ற்கான ஏல இனத்திற்கு **05.02.2018** ம் நாளிட்ட ஈரோடு மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள சுங்கம் வசூல் கட்டணங்களின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3. பொது நிபந்தனை மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கான ஏல அறிக்கையினை ஏதாவது ஒரு கூட்டுறவு அச்சங்களில் அச்சடித்து கொள்ளவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.**262**

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான திரு.வி.க கடை எண் 9க்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) அரசாணை எண்.92 நாள்.03.07.2007, முதல் தொகுப்பு கால அளவு 30.11.2020 உடன் முடிவடைவதால், இக்கடையின் குத்தகை உரிமைதாரர், 01.12.2020 முதல் 30.11.2023 வரை உள்ள 3 ஆண்டுகளைக் கொண்ட இரண்டாம் தொகுப்பு காலத்திற்கு குத்தகையை புதுப்பித்துக் கொள்ள சம்மதித்தும், மேற்குறிப்பிட்டுள்ள கடையின் தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்ய சம்மத கடிதம் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில், 06.02.2015 அன்று வெளியிடப்பட்ட ஈரோடு மாவட்ட அரசிதழில் இந்நகராட்சியின் 2015-2016 முதல் 2017-2018 ஆம் தேதிய வரை உள்ள ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்நகராட்சிக்குச் சொந்தமான திரு.வி.க கடை எண் 9க்கு கீழ்கண்டுள்ள விவரப்படி குத்தகை உரிமைதாரர்க்கு 01.12.2020 முதல் 30.11.2023 வரை உள்ள 3 ஆண்டுகளைக் கொண்ட இரண்டாம் தொகுப்பு காலத்திற்கு குத்தகையை நீடிப்பு செய்யவும், 30.11.2020 ஆம் தேதிய வாடகையில் 15% உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை விவரம் | உரிமதாரர் பெயர் | 30.11.2020ல் மாத வாடகை | 15% உயர்வு ரூ. | 01.12.2020 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 060/BD01/ 00031 | திரு.வி.க கடை எண் 9 | திரு.S.M.H. ராஜ்கபூர் | 10700 | 1605 | 12305 |

**(ந.க.எண் 1135/2015/அ1)**

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.263

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :4</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள், பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டிகள், அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் உள்ள குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய இடங்களில் குடிநீர் தொட்டிகளின் கொள்ளளவு, சுத்தம் செய்யப்பட்ட, சுத்தம் செய்யப்பட வேண்டிய விவரங்கள், பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் விவரம் எழுதுதல், அண்ணாநகர் நீருந்து நிலையத்தில் முன்புற கேட்டில் நகராட்சியின் பெயர் எழுதுதல், மற்றும் அதன் பக்கவாட்டு சுவற்றில் வாசகங்கள் எழுதுதல் பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.20 இலட்சம் ஆகும். எனவே, பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 15–ன் கீழ்** உள்ளூர் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. வரதராஜ், தனுஷ்யா ஆர்ட்ஸ், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி, பணி முடித்து தொகை ரூ.19,426/– வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந. க. எண்.1558/2020/இ1)**

**அலுவலக குறிப்பு :-**

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.264
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சி பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பிறபடிகள் வழங்கவும், நகராட்சி செலவீனத்தை மேற்கொள்ள போதுமான நிதி பற்றாக்குறை உள்ளதனை அடுத்து, இந்நகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத அம்மா உணவகத்தின் அருகில், சத்திரம் வீதியில் வடக்கு நோக்கி உள்ள காலியிடத்தில் முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி (Pre auction Cum Tender) முறையில் பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி அதன் மூலம் புதியதாக 7 கடைகளை கட்டி வாடகைக்கு விடும் பட்சத்தில், எதிர்காலத்தில் வருவாய் மற்றும் மூலதன நிதிக்கு வருவாய் உயர்த்தும் நோக்கில் சுமார் ரூ. 9.70 இலட்சத்தில் 6'x8' என்ற அளவில், மேற்கூரை தகரசீட் கொண்டு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு, 27.08.2020—ஆம் தேதியன்று குறுகிய கால முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

மேற்படி சத்திரம் ரோடு வடக்கு முகமாக உள்ள 7 கடைகளில் 5 கடைகளுக்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு மற்றும் கடை எண்.11 மற்றும் 14 க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கொடுக்கவில்லை. இவ்விரண்டு கடைகளுக்கு மறு ஏலம் கோரவும், இந்நகர் மன்ற தீர்மானம் எண்.220 நாள் 07.09.2020—ஆம் தேதியன்று அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது போதிய நிதி வசதியில்லாததாலும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராததாலும், மேற்படி சத்திரம் ரோட்டில் வடக்கு முகமாக 6x8 ஒரே அளவுள்ள 7 கடைகளுக்கு பதிலாக , (கடை எண் 11 முதல் கடை எண் 15 வரை) 5 கடைகள் மட்டும் கட்டவும் , கடை எண் 16 மற்றும் 17 ஆகிய இரு கடைகள் கட்டப்படவுள்ள இடத்தில், மின் மாற்றி (டிரான்ஸ்பார்மர்) உள்ளதால் இவ்விரு கடைகள் கட்ட இயலாது என்ற காரணத்தால், அவ்விரு கடைகள் கட்டுவதை ரத்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கீழ்க்கண்ட விபரப்படி ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்ட கடை எண்களுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளவர்களின் சம்மதக் கடிதத்தின்படி அவர்கள் கோரிய வாடகை தொகைக்கு, தற்பொழுது கடை எண்ணை மாற்றி வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | முன் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | சத்திரம் ரோடு ஏற்கெனவே ஒப்படைக்கப் பட்ட கடை எண் | முன் ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | தற்போது மனுதாரரின் சம்மதத்தின்படி ஒப்படைக்கப் பட்ட கடை எண் |
|---|---|---|---|---|
| 1 | திரு.R.வெங்கிடுசாமி வடக்கு பார்த்த கடை 6'x8' | 12 | 4600/- | 12 |
| 2 | திருமதி.M.நிர்மலா வடக்கு | 13 | 4500/- | 13 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பார்த்த கடை 6’x8’ | | | |
| 3 | திருமதி.வெ.சுதா வடக்கு பார்த்த கடை 6’x8’ | 15 | 4500/- | 11 |
| 4 | திரு.கே.சுரேஷ் வடக்கு பார்த்த கடை 6’x8’ | 16 | 4500/- | 14 |
| 5 | திரு.கே.சுரேஷ் வடக்கு பார்த்த கடை 6’x8’ | 17 | 6201/- | 15 |

(ந.க. எண்.547/2020/அ1)

**அலுவலகக் குறிப்பு :**

1) கடை எண் 16 மற்றும் 17 ஆகிய இரு கடைகள் கட்டப்படவுள்ள இடத்தில், மின் மாற்றி (டிரான்ஸ்பார்மர்) உள்ளதால் இவ்விரு கடைகள் கட்ட இயலாது என்ற காரணத்தால், அவ்விரு கடைகள் கட்டுவதை ரத்து செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) மனுதாரரின் சம்மத கடிதத்தின்படி அவர்கள் கோரிய கடை எண்யை மாற்றி வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.265

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :6</u>**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 ன் கீழ் தார்சாலைகள் புதுப்பித்தல் பணி மற்றும் கான்கிரீட் சாலைகளை மாற்றி புதிதாக பேவர் பிளாக் அமைக்கும் பணி நடைபெற உள்ளது. இந்நிலையில் மேற்படி பேவர் பிளாக் அமைக்கும் சாலைகள் சிமெண்ட் கான்கீரீட் சாலையாக இருப்பதால் அதன் பழுதடைந்த கடினமான மேற்பரப்பினை **(Rough Surface)** நீக்கினால் மட்டுமே பணியினை மேற்கொள்ள இயலும். எனவே மேற்படி பணி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாததால் தனியாக மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1767/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை 2020-2021 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் வருவாய் மற்றும் மூலதன நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

இ) தனிஅலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மான எண்.266
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :7</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தெருக்கடைகள் வைத்து வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளின் கோரிக்கைக்கிணங்க தினசரி சந்தை வீதியில் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் வடக்கு நோக்கி கூடுதலாக ஏழு கடைகள் (Shop No.11 to 17) முறையே முகப்பு 6"0" X 8"0" நீளம் (1.83m X 2.44m) அளவில் கட்டிடம் கட்டுவதற்கு நகர்மன்ற தீர்மான எண். 190, நாள்.31.07.2020ன்படி அனுமதி பெறப்பட்டு, உரிய ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி நகர்மன்ற தீர்மான எண். 213, நாள்.07.09.2020ன்படி திருமதி.வள்ளியம்மாள் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி கூடுதலாக 7 எண்ணிக்கை கடைகள் கட்டும் இடத்தில் மின்சார வாரியத்தின் உயர்மின் அழுத்த மின்கம்பம் உள்ளதாலும், நகராட்சியில் போதுமான நிதி இல்லாததாலும், மொத்தம் 7 எண்ணிக்கை கடைகளில் Pre auction முறையில் 5 எண்ணிக்கை கடைகள் மட்டுமே ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி எடுக்கப்பட்டுள்ளதாலும், 7 எண்ணிக்கை கடைகள் கட்டுவதற்கு பதிலாக 5 எண்ணிக்கை கடைகள் மட்டுமே கட்டுவதற்கு திருத்திய மன்றப்பொருளும், ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி எடுத்துள்ள திருமதி.வள்ளியம்மாள், ஒப்பந்ததாரருக்கு திருத்திய பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.914/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.267
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :8</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந. க. எண்.1897/2017/பி3 நாள் 16.10.2020–இன் படி தூய்மை இந்தியா திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக பராமரிப்பதற்கு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு திடக்கழிவு மேலாண்மைப் பணியில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்குவதற்கு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு 5 பரப்புரையாளர்கள் மற்றும் 1 பரப்புரை மேற்பார்வையாளரை Southern Solid Waste Management Service, No.12/182 Appattuvillai, Kottamavu, Malagumoodu (Post) Kanyakumari (Dt) என்பவர் வாயிலாக ஒப்பந்த அடிப்படையில் 16.10.2020 முதல் 31.03.2021 வரை பணி புரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பரப்புரையாளர்கள் மற்றும் பரப்புரை மேற்பார்வையாளருக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து ஊதியத் தொகை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் வாயிலாக வரும் வரை ஊதியம் வழங்கவும், அக்டோபர் 2020 மாதத்திற்குரிய ஊதியத் தொகையினை மன்றத்தின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.268

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :9</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் செயல்பட்டு வரும் நவீன ஆடுவதைக் கூடத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (பெருந்துறை) யிடமிருந்து செயல்பாட்டுக் கட்டணம் (consent to operate) வருடாந்திர கேட்புத் தொகை ரூ.32,600 வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(எச்.1/ /2020)

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.269

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :10</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான நுண்ணுயிரி உரமாக்கல் மையத்தில் உள்ள குப்பை அரைக்கும் இயந்திரம் பழுது பார்த்தல் பணி மற்றும் பழுதடைந்த உதிரி பாகங்கள் மாற்றி புதிய பாகங்கள் பொருத்துதல் பணிக்காக கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Aalpha Info Systems, Erode | ரூ.89798/– |
| 2. | Fine Air Systems, Coimbatore | ரூ.105350/– |
| 3. | Total Solutions, Erode | ரூ.112926/– |

இப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15–ன் கீழ்** பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Aalpha Info Systems, Erode அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி, பணி முடித்து, தொகை ரூ.89798/– வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந. க. எண்.1219/2020/இ1)

**அலுவலக குறிப்பு:-**

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.270

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் :11</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் கட்டிட கழிவுகள் மற்றும் விற்பனையாகாத பிளாஸ்டிக் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண். TN36AQ 4883 வாகனத்திற்கு ஆயுள் காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்கும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.37000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந. க. எண்.1759/2020/எச்1)**

**அலுவலகக் குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.271

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் :12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் முடித்திருத்தகம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை நகராட்சி அலுவலகத்தில் பெற்று , 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-ல் உள்ள உட்பிரிவு (II) மற்றும் (III)–ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–ன்படி தவறாமல் உரிமம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிப்பு செய்வதற்கும் தினசரி நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கில வடிவில் விளம்பரம் செய்வதற்கும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.272
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 1</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணி மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணிகளுக்காக மக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக வீடுகள் தோறும் மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளின் மேலாண்மை, டெங்கு காய்ச்சலை உருவாக்கும் முதிர் கொசு மற்றும் முதிர்கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் குறித்த விழிப்புணர்வினை நகர்ப்பகுதிகளில் உள்ள பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | விலை ரூ. |
|---|---|---|---|
| 1) | Kovilpatti Small Scale Industries Co-operative Society Ltd., Ind. No. Tuti-9 86A/7 Muthu Complex, New Road, Kovilpatti-628 501. | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் 1 நெ. | 15.00 |
| | | திடக்கழிவு மேலாண்மை குறித்த ஸ்டிக்கர் 1 நெ. | 15.00 |
| 2) | Tirunelveli District Multi Purpose Service Industrial Co-operative Society Ltd., Ind.No.TNY-2. 67/5 Dashspeek Complex, Perumal west Car Street, Tirunelveli Junction – 627 701. | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் 1 நெ. | 16.00 |
| | | திடக்கழிவு மேலாண்மை குறித்த ஸ்டிக்கர் 1 நெ. | 16.00 |
| 3) | Arumbakkam Stationeries & Printing Service Industrial Co-Operative Society Ltd., 24/20 Duraipillai Street, Sri Sakthi Nagar, Arumbakkam, Chennai-600 106. | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் 1 நெ. | 16.50 |
| | | திடக்கழிவு மேலாண்மை குறித்த ஸ்டிக்கர் 1 நெ. | 16.50 |

மேற்படி வரிசை எண்.1–ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Kovilpatti Small Scale Industries Co-operative Society Ltd., Ind. No. Tuti-9, 86A/7 Muthu Complex, New Road, Kovilpatti-628 501 நிறுவனத்திற்கு பணியாணை வழங்கிடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

(ந. க. எண். 1706/2020/எச்.1)

**அலுவலகக் குறிப்பு: -**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.273

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 2</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020-2021 (Tied Grant) நிதியின் கீழ் முதல் தவணையில் ரூ.26,33,870/- அனுமதிக்கப்பட்டு, தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பணிகளை மேற்கொள்ள முதல் மானிய தவணை தொகைக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான வளமீட்பு மையத்திற்கு புதிதாக Baling Machine (25 to 30 Kg Loading Capacity) விநியோகம் செய்தல் பணி | 3.00 |
| 2 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் சுத்திகரிக்கும் Filter Bedன் வடிப்பான்களை (Filter Media) மாற்றி மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 9.80 |
| 3 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு குடிநீர் விநியோகிக்கும் பிரதான குடிநீர் குழாயில் திட்டம்-1 புதிதாக Scour Valveகள் பொருத்தி தலைமை நீரேற்று நிலையத்தில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 5.17 |
| 4 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட ஜெ.ஜெ.நகர் பிரதான குடிநீர் குழாயின் PVC பைப்புகளை மாற்றி புதிதாக 150mm DI K7 பைப்புகள் பொருத்துதல் பணி | 8.53 |
| | **மொத்தம்** | **26.50** |

**(ந.க.எண். 1841/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) கூடுதல் செலவினத்தினை நகராட்சியின் 2020-2021 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.274

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 3</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குபட்ட வார்டு எண்.14, ஜெ.ஜெ.நகர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்காக கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1. | திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |

இப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி—15ன் கீழ்** பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் 0.01% மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி, பணி முடித்து, தொகை ரூ.1,20,925/- வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1690/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:—**

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.275
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தற்பொழுது இரண்டு கோட்டங்களுக்கு 9 எண்ணிக்கை டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியாளர்கள் திரு. வி. ஜெயராஜ், ஒப்பந்ததாரர் வாயிலாக பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சிப் பகுதிகளில் இரண்டு துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் இரண்டு கோட்டங்களுக்கு டெங்கு தடுப்பு பணியினை மேற்பார்வையிட்டு வருகின்றனர். கோட்டங்களுக்கு 5 DBC நபர்கள் வீதம் 10 நபர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால், தற்பொழுது 9 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, கூடுதலாக 1 நபரை வழங்க உத்திரவு வழங்கவும், இதற்காகும் உத்தேச செலவினம் வருடத்திற்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதாரம் தொற்று நோய் தடுப்பு பணியினை கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.276

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 5</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் பழுதடைந்துள்ள சிமெண்ட் கான்கீரீட் சாலையின் கடினமான மேற்பரப்பினை **(Rough Surface)** நீக்குதல் பணிக்காக 30.12.2020 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | பழுதடைந்துள்ள சிமெண்ட் கான்கீரீட் சாலையின் கடினமான மேற்பரப்பினை **(Rough Surface)** நீக்குதல் பணி | 3.00 இலட்சம் | வி.பி.என்.பில்டர்ஸ் திருப்பூர் | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சிதம்பரம் பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள வி.பி.என்.பில்டர்ஸ், திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1767/2020/இ1)**
**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.277

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

<u>**பொருள் எண் : 6**</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியானது ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சி 1922 ஆம் ஆண்டு கிராம பஞ்சாயத்தாக ஆரம்பிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டு முதல் நகர பஞ்சாயத்தாக தரம் உயர்த்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 09.08.2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 4.54 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 18967 ஆகும். நகராட்சியானது 18 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பவானிசாகர் அணை கீழ் பவானி வாய்க்கால் நீரை ஆதாரமாக கொண்டு, 1970 ஆம் ஆண்டு முதல் பவானிசாகர் பேரூராட்சி மற்றும் புன்செய்ப் புளியம்பட்டி பேரூராட்சி கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் 1.10 எம்.எல்.டி அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. 22.01.2003 தேதி முதல் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஒருங்கிணைந்த குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் (Integrated Water Supply Scheme-IWSS) 5.64 கோடி செலவில் குடிநீர்த் திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டு 1.60 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் 2013—14ன் கீழ் புதிய மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு தினசரி 2.20 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 116 லிட்டர் வீதம் மூன்று நாட்களுக்கு ஒரு முறை பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

தலைமை நீரேற்று நிலையத்தில் Rapid Sand Filter மூலமாக 2.20 எம்.எல்.டி சுத்திகரிப்பு செய்யப்பட்டு 5.25 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டியில் தேக்கப்படுகிறது. அவ்வாறு தேக்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் முதல் குடிநீர் திட்டத்தில், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 17 கி.மீ தொலைவில் உள்ள மாதம்பாளையம் மேல்நிலைத் தொட்டிக்கு 200 எம். எம் மற்றும் 250 எம். எம் சி.ஐ பிரதான குழாய் மூலமாகவும், இரண்டாவது குடிநீர் திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 17 கி.மீ தொலைவில் உள்ள மாதம்பாளையம் மேல்நிலைத் தொட்டிக்கு 200 எம். எம் சி.ஐ மற்றும் 250 எம்.எம் ஏ.சி பிரதான குழாய் மூலம் அண்ணாநகர் நீருந்து நிலையம் வழியாக நீர் உந்தப்பட்டு நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 11.45 இலட்சம் கொள்ளளவு கொண்ட 7 எண்ணிக்கைகள் மேல்நிலைத் தொட்டியில் நிரப்பப்பட்டு 47 கி.மீ நீளம் உள்ள பகிர்மான குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சி பகுதியில் மொத்த குடியிருப்பு 7353 எண்ணிக்கை வரிவிதிப்பில் 4980 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகளும், 164 எண்ணிக்கை வணிக குடிநீர் இணைப்புகளும் உள்ளது. தொழில் நிறுவனம் குடிநீர் இணைப்புகள் ஏதும் இல்லை. மேலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக 119 எண்ணிக்கைகள் பொது குடிநீர் குழாய்களும் உள்ளது.

## புதிய குடிநீர் திட்டத்தின் தேவைக்கான காரணங்கள்

### 1) குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (Treatment Plant)

22.01.2003 தேதியில் கட்டப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் ( Treatment Plant) 1.60 எம்.எல்.டி கொள்ளளவு கொண்டதாகும். ஆனால் தற்போது உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப 90 LPCD குடிநீர் விநியோகம் செய்ய 2013-14 ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு தினசரி 2.20 எம்.எல்.டி குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. எனவே தற்போது உள்ள மக்கள் தொகைக்கும் அடுத்த 20 வருடத்தில் மக்கள் பெருக்கத்தை கணக்கில் கொண்டும் புதியதாக சுத்திகரிப்பு நிலையம் (Treatment Plant) கட்டப்பட வேண்டும்.

### 2) குடிநீர் உந்தும் குழாய் (Pumping main)

தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மேல்நிலைக் குடிநீர் தொட்டிக்கு குடிநீர் உந்து குழாய்கள் பவானிசாகர் நெடுஞ்சாலையில் மண் பகுதியில் உள்ளது. மேற்படி சாலையில் கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் நிலையில் தற்சமயம் சாலையை அகலப்படுத்தும் போது தார் சாலையில் அமைந்துள்ள குடிநீர் உந்து குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் பழுது, உடைப்பு மற்றும் கசிவு ஏற்படும் நிலையில் உடனுக்குடன் பழுது சரிசெய்ய இயலாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் நகரில் குடிநீர் பிரச்சனைகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

மேலும் இரண்டு குடிநீர் திட்டங்களில் தனித்தனியே தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சி பகுதிக்கு குடிநீர் உந்தப்படுவதால் மின்சார கட்டண செலவு மிக அதிகமாக ஆகிறது. எனவே பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கும் ஒரு புதியதாக குடிநீர் உந்து குழாய் அமைக்கப்பட வேண்டும்.

### 3) பகிர்மான குழாயுடன் மேல்நிலைத் தொட்டி

நகராட்சி பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் (Staging Height) 9.00 மீட்டர் இருந்து 6.00 மீட்டர் வரை உள்ளது. இதனால் கடைசி பகுதி போதிய அழுத்தத்துடனும், சீராகவும் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. மேலும் மூன்று நாட்களுக்கு ஒருமுறை தான் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே அனைத்து பகுதிகளுக்கும் சீராகவும், தினசரியும் Residual level 7.00 மீட்டருக்கு குடிநீர் விநியோகம் செய்ய 16.00 மீட்டர் Staging Height உடன் புதியதாக குடிநீர் மேல்நிலைத் தொட்டியும், தேவையான அளவிற்கு பகிர்மான குழாய்களும் அமைக்கப்பட வேண்டும்.

### 4) வீட்டு குடிநீர் இணைப்புகள்

மேலும் குடிநீர் இணைப்புகள் Pit tap தவிர்க்கவும், சீராக குடிநீர் விநியோகம் செய்யவும், அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் Flow Control Valve உடன் MDPE

பொருத்தப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு குடிநீர் அபிவிருத்திப் பணிகள் செய்ய வேண்டியது தற்பொழுது மிகவும் அவசியமாகிறது. இதற்காக நகர்மன்றத்தில் தீர்மானம் எண்.225 நாள்.07.09.2020 நிறைவேற்றப்பட்டு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் குடிசைப்பகுதி நிறைந்துள்ள (Slum) வார்டு எண்.7,10,11 மற்றும் 12 ஆகிய பகுதிகளில் உள்ள 4295 நபர்களுக்கு சீரான முறையில் சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யவும், இந்நகராட்சிக்குட்பட்ட அம்மன் நகர் பகுதியில் புதிதாக 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு (16m Staging height) கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டும். மேற்கண்ட பணி மிகவும் அத்தியாவசிய பணி என்பதாலும், நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தாலும் இப்பணி மேற்கொள்ள அடிப்படை வசதிகள் (Basic Amenties) திட்டத்தின் கீழ் ரூ.90.00 இலட்சம் மானியமாக கோரலாம்.

**(ந.க.எண். 1919/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.278

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,<br>தனிஅலுவலர்,<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.12.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்

<u>**பொருள் எண் : 7**</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில் முதிர் ஏடிஸ் கொசுப்புழு ஒழிப்புப் பணிக்காக DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று கொசுப்புழு உருவாகும் கலன்களைக் கண்டறிந்து அழிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் நிலையான கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் நீரிலுள்ள டெங்கு கொசுப்புழுக்களை அழிப்பதற்கு அபேட் மருந்து அவசியமாகிறது. எனவே தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் அவசர அவசியம் கருதி அபேட் மருந்து வாங்குவதற்கும் தமிழ்நாடு மருந்துப்பொருள் வழங்கல் கழகம் (TNMSC) அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து அபேட் மருந்து கொள்முதல் செய்வதற்கும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.2.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) பொது சுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/ /2020

தீர்மான எண்.279

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார்,
தனிஅலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர் (பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.